# பகுதி III

# பகுதி III

## 1998ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும் சுற்றறிக்கைகளும்


1. மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்களுக்கான திறைசேரி முறிகளின் பயன்பாடு
சுற்றறிக்கை எண்: பீடி/01/98 I

2. யப்பான் இலங்கை சிறப்புக் கொடை யென் 49,997,000/- (24ஆவது படுகடன் நிவாரணக் கொடை)
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்: பீடி/02/98 II

3. பாக்கித்தான் கொடுகடன் தொடரில், பாகித்தானிய இஸ்லாமியக் குடியரசுடன் 26.2.1991 நாளிடப்பட்ட ஐ.அ.டொலர் 5 மில்லியனுக்கான கடன் உடன்படிக்கை
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்:பீடி/எப்எப்/பிஏகே/830 IV

4. இலங்கை மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் வழிகாட்டல்களும்
சுற்றறிக்கை எண்: பீடி/04/98 V

5. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு 2938 சீஈ - வலுப் பணிகள் வழங்கல் செயற்றிட்டம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்: பீடி/05/98 XI

6. ஐரோப்பாவின் தனி நாணயமான "யூரோ"வின் அறிமுகம்
தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்: பீடி/03/98 XIII

6. வர்த்தக வங்கிகளிடமிருந்து வெளிநாட்டு நாணயத் தாள்களின் கொள்வனவிற்கான மத்திய வங்கியின் வீதங்கள் XVIII

சுற்றறிக்கை எண்: பீடி/01/98

திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவு,
வங்கித் தொழில் திணைக்களம்,
30ஆம் மாடி, உலக வர்த்தக நிலையம்,
மேற்குக் கோபுரம்
எக்சலன் சதுக்கம்,
கொழும்பு - 1
1998 மே 20

அனைத்து முதனிலை வணிகர்களுக்கும், வர்த்தக வங்கிகளுக்கும்,

**மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில் கொடுக்கல் வாங்கல்களுக்கான திறைசேரி முறிகளின் பயன்பாடு**

இலங்கை மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில், கொடுக்கல் வாங்கல்களுக்காக திறைசேரி முறிகள் ஏற்றுக்கொள்ளப்படுமென்பது முதனிலை வணிகர்களுக்கும், வர்த்தக வங்கிகளுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதன்படி, மீள் கொள்வனவு உடன்படிக்கைகளுக்கும் (றெப்போஸ்) உடனடி வாங்கல், உடனடி விற்றல் நடவடிக்கைகளுக்கும் அதனது இரண்டாந்தர சந்தையில் இலங்கை மத்திய வங்கி திறைசேரி முறிகளை 1998, மே 21 இலிருந்து பயன்படுத்தும். இக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான தொழிற்பாட்டு வழிகாட்டல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. உடனடி விற்றல் அல்லது முறிகளின் மீள் கொள்வனவானது இலங்கை மத்திய வங்கியின் சொத்துப்பட்டியலில் அத்தகைய முறிகளின் கிடைப்பனவைப் பொறுத்தே அமைந்திருக்கும்.

திறைசேரி உண்டியல்களைக் கழிவீடு செய்தல் மீள் கழிவீடு செய்தல் மற்றும் மீள் கொள்வனவு செய்தல் ஆகியன தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள வழிகாட்டல்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

வை. எம். டபிள்யூ. பீ. வீரசேகர
பதில் முதன்மைக் கணக்காளர்

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்: பீடி/02/98

வெளிநாட்டு நிதிப் பிரிவு,
வங்கித் தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
தொலைபேசி: 346287
1998 யூன் 10

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்,

**யப்பான் இலங்கை சிறப்புக் கொடை யென் 49,997,000/-**
**(24ஆவது படுகடன் நிவாரணக் கொடை)**

1. தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகளிலிருந்தான இறக்குமதிகளை நிதியிடுவதற்காக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்துக்கு யப்பானிய அரசினால் வழங்கப்பட்ட கொடையொன்றின் கீழான இறக்குமதிகளைக் கையாளும் வர்த்தக வங்கிகள் இவ்வறிவுறுத்தல்களில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றன. இக்கொடையின் கீழ் இறக்குமதிகளுக்கான ஒதுக்குகள் வெளிநாட்டு மூலவளங்களின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்படும்.

2. ஒதுக்கீட்டினைப் பெற்றுள்ளவர் வழங்குநருடனான தனது ஒப்பந்தத்தின் பிரதியொன்றுடனும் இந்நோக்கத்திற்காக வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரமளிக்கப்பட்ட கடிதமொன்றுடனும் விண்ணபத்தினை மேற்கொள்ளும்போது வர்த்தக வங்கியொன்று வழங்குநரின் நாட்டிலுள்ள பேராளரினூடாக வழங்குநரின் சார்பில் கைமீட்புச் செய்ய இயலாத நாணயக் கடிதமொன்றினை நிறுவலாம். அத்தகைய நாணயக் கடிதம் ஒவ்வொன்றும் நிறுவும் வங்கியின் அடையாள இலக்கத்தினை உடனடுத்து "1வது யென் கொடை 1998" எனக் குறிப்பிடப்பட்ட முன்தொடர் இலக்கமொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியானது யப்பான், ரோக்கியோவிலுள்ள வரையறுக்கப்பட்ட ரோக்கியோ - மிற்சுபிசி வங்கி உலகளாவிய வங்கிப் பணிப்பிரிவில், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் யென் சாதாரண வைப்புக் கணக்கு எண் 3076706இல் பற்று வைப்பதன் மூலம் செலவீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனை ஒவ்வொரு நாணயக் கடிதமும் குறித்துரைத்தல் வேண்டும். செலவீட்டிற்கான கோரிக்கையானது, ஆவணங்கள் நாணயக் கடிதத்தின் நியதிகளுக்கு இசைவாக உள்ளன எனவும் ஆவணங்கள் கடன் திறக்கப்பட்ட வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளன எனவும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய கடன் நிறுவப்பட்டதன் பின்னர் கடன் வழங்கும் வங்கியானது ஒவ்வொரு நாணயக் கடிதத்தினதும் இரண்டு பிரதிகளை இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் கணக்காளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அதன் பின்னர் அவர் கடன் தொடர்பான செலவீட்டு அனுமதியினை வரையறுக்கப்பட்ட டோக்கியோ மிற்சுபிசி வங்கி, டோக்கியோ, யப்பான் என்ற முகவரிக்கு அனுப்பி வைப்பார். இந்த அனுமதியின்றி கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு செலவீடு மேற்கொள்ளப்படமாட்டாது.

4. கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கியிலிருந்து ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவுடன் ஆவணங்களின் பெறுமதியின் இலங்கை ரூபாவிற்குச் சமமான தொகையினைச் சேகரித்துக்கொண்டதன் பின்னர் மட்டுமே கடன் திறக்கும் வங்கி அவற்றினை இறக்குமதியாளருக்கு விடுவித்தல் வேண்டும். இறக்குமதியாளருக்கு அத்தகைய ஆவணங்களை விடுவிப்பதற்கு முன்னர் ஆவணங்களின் முழுப் பெறுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதனை வர்த்தக வங்கிகள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். சம்பந்தப்பட்ட வங்கியினால் ஆவணங்களைப் பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்பட்ட 10 நாட்களுக்குள் இறக்குமதியாளரினால் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியான 10 நாட்களுள் ஆவணங்களின் பெறுமதியினை இறக்குமதியாளர் செலுத்தத் தவறினால் வங்கியிலிருந்து ஆவணங்கள் பெறப்பட்டதற்கான அறிவுறுத்தல்கள் பெறப்பட்ட நாளிலிருந்து

இறக்குமதியாளரினால் உண்டியல் தீர்க்கப்படும் நாள்வரை வங்கி வீதத்திற்கு மேலதிகமாக ஆண்டொன்றிற்கு 3% வட்டி செலுத்தவேண்டியேற்படும்.

6. இறக்குமதியாளரிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆவணங்களின் ரூபாப் பெறுமதியினை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்தும்போது வர்த்தக வங்கிகள் இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தலை மேற்கோள்காட்டி பின்வரும் தகவல்களைத் தருதல் வேண்டும்.

(அ) இறக்குமதியாளரின் பெயரும் முகவரியும்.
(ஆ) நாணயக் கடிதத்தின் எண்.
(இ) ஏற்றுமதியாளரின் பெயர்.
(ஈ) யென்னுக்குச் சமமான தொகை (ஆவணங்கள் வேறு ஏதேனும் மாற்றத்தக்க நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்டிருப்பின் குறித்துக் காட்டப்படுதல் வேண்டும்.)
(உ) பிரயோகிக்கப்படும் செலாவணி வீதம் (யப்பானிய யென் வீதமும் எதிர்முகமாக நாணயக் கடிதம் திறக்கப்பட்ட நாணயத்திற்கான வீதமும் உட்பட.)
(ஊ) ஆவணங்கள் பெறப்பட்ட திகதி.
(எ) இறக்குமதியாளருக்கான அறிவுறுத்தல் திகதி.
(ஏ) இறக்குமதியாளரினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி.

7. கொடுப்பனவுகளை மேற்கொள்ளும்போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் கப்பலேற்றல் தொடர்பாக பின்வரும் ஆவணங்களின் ஒவ்வொரு பிரதியினையும் இணைப்பதற்கு வர்த்தக வங்கிகள் உறுதிசெய்து கொள்ளல் வேண்டும்.

(i) பொருட்களின் விலைப்பட்டியல்.
(ii) ஏற்றுமுறி/வான்வழிக் கட்டணம்.
(iii) வழங்குநருக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட திகதி மற்றும் கொடுப்பனவுத் தொகை என்பனவற்றிற்கான சான்று ஆவணங்கள்.

வை. எம். டபிள்யு. பீ. வீரசேகர
பதில் முதன்மைக் கணக்காளர்

பிரதிகள்: (1) வெளிநாட்டு மூலவளப் பணிப்பாளர் நாயகம்,
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்,
செயலகம்,
கொழும்பு - 1

(2) செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

பீடி/எப்எப்/பிஏகே/830

வெளிநாட்டு நிதிப் பிரிவு,
வங்கித் தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
1998 யூன் 18.

மக்கள் வங்கி
பன்னாட்டுப் பிரிவுக்கு

**பாக்கித்தான் கொடுகடன் தொடரில், பாகித்தானிய இஸ்லாமியக் குடியரசுடன் 26.2.1991 நாளிடப்பட்ட ஐ.அ.டொலர் 5 மில்லியனுக்கான கடன் உடன்படிக்கை**

1. 1991 திசெம்பர் 19ஆம் நாளிடப்பட்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் பீடி/15/91 கொண்ட மேலே கூறப்பட்ட விடயம் தொடர்பாக.

2. மேலே கூறப்பட்ட கொடுகடனுக்கான செல்லுபடியாகும் திகதியை 2000 சனவரி 15ஆம் திகதிவரை பாகித்தானிய அரசு நீடித்துள்ளது என்பதை தங்களுக்கு அறியத்தர விரும்புகிறோம். மேலும், கொடுகடனின்கீழ் கொடுப்பனவுக்குத் தகுதிவாய்ந்த இறக்குமதிகளின் பட்டியல் (மேலே குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் இணைப்பு 1இல் பட்டியலிடப்பட்டது) இலங்கை அரச புகையிரதப் பகுதிக்கான 40 பீசீஜிஎஸ் சரக்குப் பெட்டிகளையும் உள்ளடக்கும்.

3. 1991.12.19 நாளிடப்பட்ட, எண் பீடி/15/91 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் ஏனைய நியதிகளும் நிபந்தனைகளும் மாற்றமின்றியிருக்கும்.

எம். பீ. திசாநாயக்க
முதன்மைக் கணக்காளர்

பிரதிகள்:
1. செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.
2. பணிப்பாளர் நாயகம்,
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்.

சுற்றறிக்கை எண்: பீடி/04/98

வங்கித் தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30ஆம் மாடி, உலக வர்த்தக நிலையம்,
மேற்குக் கோபுரம்
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு - 1
1998 நவெம்பர் 06.

அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும், முதனிலை வணிகர்களுக்கும்,

## இலங்கை மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள் கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

## தொழிற்பாட்டு நடவடிக்கைகளும் வழிகாட்டல்களும்

1. இலங்கை மத்திய வங்கி, திறைசேரி உண்டியல்களிலும், திறைசேரி முறிகளிலுமான நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை 1998 நவெம்பர் 9இலிருந்து மீள அறிமுகப்படுத்துமென்பதை வர்த்தக வங்கிகளுக்கும், முதனிலை வணிகர்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது. உத்தேசிக்கப்பட்டுள்ள நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தொழிற்பாட்டு நடவடிக்கை முறைகள் மற்றும் வழிகாட்டல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

2. இலங்கை மத்திய வங்கியுடன் நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் தமது நிறுவனங்களின் சார்பில் ஈடுபடுவதற்கான அதிகாரம் பெற்ற தமது நிறுவனங்களிலுள்ள அலுவலர்களின் பெயர்கள் மற்றும் பதவிகளை, அவர்களது தொலைபேசி மற்றும் தொலைநகல் எண்களுடன் இலங்கை மத்திய வங்கியின் வங்கித் தொழில் திணைக்களத்திலுள்ள திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவுக்கு அறிவிக்குமாறு வர்த்தக வங்கிகளும் முதனிலை வணிகர்களும் வேண்டப்படுகின்றனர்.

3. இவ்வசதி பற்றிய மேலதிக விபரங்களை தொலைபேசி எண் 346311இல் மேலதிக முதன்மைக் கணக்காளரான திரு. வை.எம்.டபிள்யூ.பீ.வீரசேகரா, தொலைபேசி எண் 346298இல் பிரதி முதன்மைக் கணக்காளரான திரு. ஏ. கமலசிறியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்..

4. மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையில், திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளின் மீள் கொள்வனவு உடன்படிக்கைகள், கழிவீடு செய்தல் மற்றும் மீள் கழிவீடு செய்தல் தொடர்பாக தற்போது நடைமுறையிலுள்ள வழிகாட்டல்கள் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும்.

5. இலங்கை மத்திய வங்கியானது, தொழிற்பாட்டு நடைமுறைகள், வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகளை மாற்றுவதற்கான அல்லது எதுவித காரணமும் கூறாது எல்லா வசதிகளையும் ஒன்றாக மீளப்பெறுவதற்கான உரிமையைக் கொண்டிருக்கும்.

வை. எம். டபிள்யூ. பீ. வீரசேகர
பதில் முதன்மைக் கணக்காளர்.

ஏ. எஸ். ஜயவர்த்தன
ஆளுநர்.

## இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி
## தொழிற்பாட்டு நடவடிக்கைமுறைகளும் வழிகாட்டல்களும்

சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தாவிடின் இத் தொழிற்பாட்டு நடவடிக்கை முறைகளிலும் வழிகாட்டல்களிலும்:

"வங்கித் தொழில் சட்டம்" என்பது காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட்டவாறான, 1988இன் எண் 30கொண்ட வங்கித் தொழில் சட்டத்தினைக் குறிக்கும்.

"அலுவலக நாள்" என்பது வங்கி விடுமுறை நாள் தவிர்ந்த எந்த நாளையும் குறிக்கும்.

"மத்திய வங்கி" என்பது நாணய விதிச் சட்டத்தினால் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கியைக் குறிக்கும்.

"உரிமம் பெற்ற வர்த்தக வங்கி" என்பது வங்கித் தொழில் சட்டத்திலுள்ள அதே கருத்தையே கொண்டிருக்கும்.

"நாணய விதிச் சட்டம்" என்பது, காலத்துக்குக் காலம் திருத்தம் செய்யப்பட்டவாறான (இலங்கைச் சட்டவாக்கங்களில் 422ஆம் அத்தியாயம்) நாணய விதிச் சட்டத்தைக் குறிக்கும்.

"உடனடிக் கொள்வனவு" என்பது நிபந்தனையற்ற விதத்தில் மத்திய வங்கி பிணைகளைக் கொள்வனவு செய்தலைக் குறிக்கும்.

"பங்குபற்றும் நிறுவனம்" என்பது உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றை அல்லது முதனிலை வணிகரொருவரைக் குறிக்கும்.

"முதனிலை வணிகரென்பது" நாணய விதிச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறான முதனிலை வணிகரொருவரைக் குறிக்கும்.

"கொள்வனவுப் பெறுமதி" என்பது நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் பொருள்சார் விடயத்தினை உருவாக்கும் அனைத்துப் பிணைகளினதும் மொத்தக் கொள்வனவு விலைகளைக் குறிக்கும்.

"நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்" என்பது பங்குபற்றும் நிறுவனமொன்றிடமிருந்து மத்திய வங்கி பிணைகளைக் கொள்வனவு செய்வதைக் குறிக்கும். இக் கொள்வனவானது, மத்திய வங்கி அத்தகைய பிணைகளை குறிப்பிட்ட விலையில் அல்லது இலாபத்தில் அத்தகைய கொள்வனவு மேற்கொள்ளப்பட்டபோது உடன்பட்டுக்கொண்ட நாளில் மீள விற்பனை செய்ய வேண்டுமென்ற உடன்படிக்கைக்குட்பட்டும் அமையும்.

"பிணை" என்பது திறைசேரி உண்டியலொன்றை அல்லது திறைசேரி முறியொன்றைக் குறிக்கும்.

"மீள் விற்பனைப் பெறுமதி" என்பது நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் பொருள்சார் விடயத்தை உருவாக்குகின்ற அனைத்துப் பிணைகளினதும் மொத்த மீள் விற்பனை விலைகளைக் குறிக்கும்.

"திறைசேரி உண்டியல்" என்பது உள்ளூர் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் (இலங்கை சட்டவாக்கங்கள் அத்தியாயம் 319) வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலொன்றைக் குறிக்கும்.

"திறைசேரி முறி" என்பது பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணைகள் கட்டளைச் சட்டத்தின்கீழ் (இலங்கை சட்டவாக்கங்கள் அத்தியாயம் 320) வழங்கப்பட்ட திறைசேரி முறியொன்றைக் குறிக்கும்.

"வேலை நேரம்" என்பது அலுவலக நாளொன்றில் 0800 மணியிலிருந்து 1615 மணிக்கிடையிலான எந்த நேரத்தையும் குறிக்கும்.

தனி எண்ணிக்கையிலான சொற்கள் அவற்றின் பன்மையையும் பல எண்ணிக்கையிலான சொற்கள் அவற்றின் ஒருமையையும் உள்ளடக்கும்.

1. பங்குபற்றும் நிறுவனமொன்று இத் தொழிற்பாட்டு நடவடிக்கை முறைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கிணங்க நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதன்மூலம், மத்திய வங்கியினால் வழங்கப்படும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

2. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதன் மூலம் நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் பங்குபற்றும் நிறுவனமொன்றானது, இத் தொழிற்பாட்டு நடவடிக்கைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை ஏற்றுக்கொள்வதுபற்றி மத்திய வங்கிக்கு எழுத்தில்

தெரிவிக்கலாமென்பதுடன், நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அத்தகைய நிறுவனத்தின் சார்பில் தொழிற்படவும், கையெழுத்திடவும் அதிகாரம்பெற்ற அலுவலர்களின் பெயர்களையும், அந்நிறுவனத்தின் முகவரி மற்றும் தொலைபேசி எண், தொலைமடல் மற்றும் தொலைநகல் எண்கள் ஆகியவற்றையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை 1இல் மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

3. நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலுக்குப் பொருந்தக்கூடிய வட்டி வீதம், மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படலாமென்பதுடன், இது காலத்துக்குக் காலம் ரொயிட்டர்ஸ் திரையில் அறிவிக்கப்படும்.

4. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலின் கால அளவானது, பங்குபற்றும் நிறவனங்களுக்கு வேறு ஏதாவது விதத்தில் தெரிவிக்கப்பட்டாலன்றி, ஒரு நாளாகவே (ஓரிரவு) இருக்கும்.

5. நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலில், பிணையொன்றின் கொள்வனவு விலையானது, அத்தகைய பிணையொன்றின் உடனடிக் கொள்வனவு விலையாக மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் தீர்மானிக்கப்படும் விலையாக இருக்கலாம்.

6. நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலில் பிணையொன்றின் மீள் விற்பனை விலையானது, ஐந்தாம் பந்தியில் குறிப்பிடப்பட்டபடி அத்தகைய பிணையின் கொள்வனவு விலையும், 3ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்ட வீதத்தில் நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் கால அளவுக்கான கொள்வனவு விலை மீதான வட்டியும் சேர்ந்ததாகும்.

7. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட விரும்பும், பங்குபற்றும் நிறுவனமொன்று மத்திய வங்கியின் வங்கித் தொழில் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவுடன் எந்நாளிலும் 423914, 422094 மற்றும் 421191 ஆகிய தொலைபேசி எண்களில் அல்லது மத்திய வங்கியினால் காலத்துக்குக் காலம் தெரிவிக்கப்படும் அத்தகைய ஏனைய எண்களிலும், அத்தகைய நாளில் 0900 மணித்தியாலத்திலிருந்து 1400 மணித்தியாலத்திற்கிடையில் பின்வரும் தகவல்களை வழங்கி நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலுக்கான இசைவொன்றைத் தெரிவிக்கலாம்.

(அ) பங்குபற்றும் நிறுவனத்தினால் நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெற்றுக்கொள்ள வேண்டிய தொகை;

(ஆ) நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலுக்காக வழங்கப்பட்ட பிணையின் முகப்புப் பெறுமதி, தொடர் எண் மற்றும் முதிர்ச்சித் திகதி; மற்றும்,

(இ) அப்பிணையானது திறைசேரி முறியொன்றாக இருக்கும் பட்சத்தில் அதன் நறுக்கு வீதம் என்பனவாகும்.

தொலைபேசியில் இசைவு அறிவிக்கப்பட்டு 30 நிமிடங்களுக்குள் அவ்விசைவுபற்றிய உறுதிப்பாடு, பின்வரும் தொலைநகல் அல்லது தொலை மடல் மூலம் எழுத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தொலைநகல்: 421192, 421194, 421195, 421198

தொலைமடல்: 23505, 23506

பங்குபற்றும் நிறுவனமானது, தனது இசைவை தொலைமடல் அல்லது தொலைநகல் மூலம் உறுதிப்படுத்த முடியாதவிடத்து, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மத்திய வங்கியின் வங்கித் தொழில் திணைக்களத்தினது, திறந்த சந்தைப் பிரிவுக்கு எழுத்திலான தனது உறுதிப்படுத்தலை வழங்குவதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது இசைவினை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் எழுத்தில் உறுதிப்படுத்த வேண்டுமென்பது பங்குபற்றும் நிறுவனத்தின் பொறுப்பாகும்.

8. மத்திய வங்கியானது, பங்குபற்றும் நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்ட இசைவினை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடப்பாட்டினைக் கொண்டிராததோடு, அத்தகைய இசைவினை அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்கவோ அல்லது மறுக்கவோ முடியும்.

9. பங்குபற்றும் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட இசைவினை அல்லது அதனது பாகமொன்றினை ஏற்றுக்கொண்டமையை 2ஆம் பந்தியின் கீழ் அந்நிறுவனத்தினால் வழங்கப்பட்ட தொலைபேசி, தொலைநகல் மற்றும் தொலைமடல் எண்களின் மூலம் மத்திய வங்கியினால் அதே நாளில் 1400 மணித்தியாலமளவில் அறிவிக்கப்படும், அட்டவணை 1இலுள்ள மாதிரி அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இசைவு தொடர்பில் நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கையொன்று பங்குபற்றும் நிறுவனத்துக்கு தொலை நகல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

10. மத்திய வங்கியினால் இசைவு ஏற்றுக்கொள்ளப்பட்ட பங்குபற்றும் நிறுவனமொன்று, பிணையை மத்திய வங்கியின்பேரில் உரிய முறையில் புறக்குறிப்பீடு செய்து அத்தகைய பிணையை, பங்குபற்றும் நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற அலுவலர்களால் கையெழுத்திடப்பட்ட நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கையுடன் இணைத்து அதேநாளில் 1500 முன்னதாக மத்திய வங்கிக்கு ஒப்படைக்க வேண்டும்.

11. நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலுக்கான பிணையொன்றை வழங்கும் பங்குபற்றும் நிறுவனமொன்று நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலுக்காக வழங்கப்பட்ட பிணையை மாற்றல் செய்யக்கூடிய முழுமையானதும் கட்டுப்பாடற்றதுமான உரிமையைக் கொண்டதாகக் கருதப்படும். பந்தி 2இன் கீழ் பங்குபற்றும் நிறுவனத்தினால் மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட பெயர்களைக்கொண்ட ஆட்களில் எவரொருவரினாலும் இடப்பட்டதாகக் கருதப்படும் கையெழுத்தானது, பங்குபற்றும் நிறுவனத்தின் சார்பில் அத்தகைய ஆளினால் உரியமுறையில் இடப்பட்டதாகக் கருதப்படலாம்.

12. உரிய முறையில் புறக்கீடு செய்யப்பட்ட பிணை மற்றும் உரிய முறையில் நிறைவேற்றப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை ஆகியவற்றை மத்தியவங்கி பெற்றுக்கொண்டதன் பின்னர் மத்திய வங்கியுடனான பங்குபற்றும் நிறுவனத்தின் கணக்குக்கு பிணையின் கொள்வனவுப் பெறுமதி வரவு வைக்கப்படும்.

13. நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட மீள் விற்பனைத் திகதியில், பங்குபற்றும் நிறுவனத்தின் மத்திய வங்கியுடனான கணக்குக்கு நேர்மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட மீள்விற்பனைப் பெறுமதி பற்று வைக்கப்படும்.

14. நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு விற்பனைத் திகதியில் மீள்விற்பனைப் பெறுமதி பங்குபற்றும் நிறுவனத்தின் கணக்கில் பற்று வைக்கப்படும்போது மத்திய வங்கியானது பிணையைப் பங்குபற்றும் நிறுவனத்தின் சார்பில் புறக்குறிப்பீடு செய்யும் பங்குபற்றும் நிறுவனம் அலுவலக நேரத்தில் அத்தகைய பிணையை மத்திய வங்கியிடமிருந்து சேகரித்துக்கொள்ளலாம்.

15. வங்கி விடுமுறை நாளொன்றில் நிறைவேற்றப்படவேண்டிய நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கடப்பாடானது, அதனை உடனடுத்துவரும் அலுவலக நாளில் நிறைவேற்றப்படலாம்.

16. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலொன்றைப் பொறுத்தவரையில் மத்திய வங்கியுடனான பங்குபற்றும் நிறுவனத்தின் கணக்கில் பற்றுக்கள் மற்றும் வரவுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை மத்திய வங்கி கொண்டிருக்கும்.

17. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலின் மீள்விற்பனைத் திகதியில் மீள்விற்பனைப் பெறுமதியை மத்திய வங்கியுடனான தனது கணக்கில் பற்றுவைக்கும் முகமாக, அக்கணக்கில் நிதியங்கள் போதியளவில் இருப்பதை பங்குபற்றும் நிறுவனம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். பங்குபற்றும் நிறுவனமானது இங்கு தேவைப்படுத்தப்பட்டவாறு போதிய நிதியத்தை வைத்திருக்கத் தவறுமிடத்து மத்திய வங்கியானது அந்நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலை உடனடிக் கொள்வனவாகக் கருதிக்கொள்ளவும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களைப் பூர்த்திசெய்யாமையால் கீழேயுள்ள 18ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்டவாறான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு மேலதிகமாக கணக்கு மூடலில் மத்திய வங்கிக்கு ஏற்பட்ட இழப்புக்களை, அந்நிறுவனத்தின் கணக்கில் அத்தகைய தொகையைப் பற்று வைப்பதன் மூலம் மீளப் பெற்றுக்கொள்ளவும் மத்திய வங்கி உரித்துடையதாகும்.

18. பங்குபற்றும் நிறுவனமொன்று, இங்கே உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தொழிற்பாட்டு அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டலுடனும் இசைவாக நடந்துகொள்ளத் தவறுமிடத்து மத்திய வங்கியானது பங்குபற்றும் நிறுவனமொன்றை நேர்மாற்று மீள் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடாது தடுத்துவைக்க முடியும். அத்தகைய சந்தர்ப்பத்தில் பங்குபற்றும் நிறுவனமானது முதனிலை வணிகரொருவராகக் காணப்படுமிடத்து அவரது முதனிலை வணிக உரிமை தடுத்துவைக்கப்படவோ அல்லது இரத்துச் செய்யப்படவோ கூடும்.

19. மத்திய வங்கியானது காலத்துக்குக் காலம் இத் தொழிற்பாட்டு நடவடிக்கை முறைகள் மற்றும் வழிகாட்டல்களுடன் விடயங்களைச் சேர்த்துக்கொள்ள, நீக்க அல்லது மாற்றம் செய்யக்கூடிய உரிமையைக் கொண்டிருக்கும். அவ்வாறான சேர்த்தல், நீக்குதல் மற்றும் மாற்றஞ்செய்த்தல் தொடர்பாக பங்குபற்றும் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்படுவதுடன் அறிவித்தலில் வேறு நாள் குறிப்பிடப்படாதவிடத்து அறிவிக்கப்பட்ட நாளிலிருந்தே அவை நடைமுறைக்குவரும்.

அட்டவணை I

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் பீடீ/04/98இன்கீழ்
இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள் கொள்வனவுக்
கொடுக்கல் வாங்கல்களின் தொழிற்பாட்டுக்கான அங்கீகாரம்**

நிறுவனத்தின் பெயர்:

முகவரி:
தொலைபேசி எண்:
தொலை நகல் எண்:

| அதிகாரம்பெற்ற அலுவலரின் பெயர் | பதவி | தொலைபேசி தொலைநகல் எண் | கையொப்பம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |

இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களில் .................................. (நிறுவனத்தின் பெயர்)இன் சார்பில் பங்குபற்றுவதற்கு மேலே குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் அதிகாரம் பெற்றுள்ளார்கள் என்பதை நான் உறுதிப்படுத்துகின்றேன். ஏதேனும் மாற்றங்கள் காணப்படின் உடனடியாக அறிவிப்பதற்கும் நாம் ஏற்றுக் கொள்ளுகின்றோம்.

திகதி:....................................

..........................................................................

பொது முகாமையாளர்.

தொலைபேசி எண்கள்: 422094, 423914, 421191
தொலை நகல் எண்கள்: 421192, 421194, 421195, 421198
தொலை மடல் எண்கள்: 23505, 23506

திறந்த சந்தை தொழிற்பாடுகள் பிரிவு,
வங்கித் தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
30ஆம் மாடி, உலக வர்த்தக நிலையம்,
மேற்குக் கோபுரம், எச்சலன் சதுக்கம்,
கொழும்பு - 1,
திகதி:

முதனிலை வணிகர்/ வர்த்தக வங்கியின் பெயரும் முகவரியும்,
..........................................................................
..........................................................................

## நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கை
## உடன்படிக்கை என்: ....................

கீழே தரப்பட்டுள்ள விபரங்களின்படி மீள் விற்பனைக்கான உடன்படிக்கையின்கீழ் இலங்கை அரசின் திறைசேரி உண்டியல்(கள்), முறி(கள்) ஆகியவற்றைத் தங்களிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டதை இத்தால் உறுதிப்படுத்துகிறோம்.

| 1. திறைசேரி உண்டியல்கள்/ முறிகள் எண் | முறியின் தொகுதி* | முதிர்ச்சி | கொள்வனவு விலை | விற்பனைக்காக இசைவு தெரிவிக்கப்பட்ட அளவு (முகப்புப் பெறுமதி) ரூ. | கொள்வனவுப் பெறுமதி ரூ. |
|---|---|---|---|---|---|
| .................... | .................... | .................... | .................... | .................... | .................... |
| .................... | .................... | .................... | .................... | .................... | .................... |
| | மொத்தம் | | | .................... | .................... |

2. மீள் விற்பனைத் திகதி (முதிர்ச்சித் திகதி) : ..........................................................
3. காலம் (நாட்களின் எண்ணிக்கை) : ..........................................................
4. வட்டி வீதம் (%) : ..........................................................
5. மீள் விற்பனைப் பெறுமதி : ..........................................................
6. தீர்ப்பனவு : ..........................................................

எங்களிடமுள்ள தங்கள் கணக்கு இல. ..............................இல் ரூ.............................................ஐ, (மொத்த கொள்வனவுப் பெறுமதி) திறைசேரி உண்டியல்(கள்)/ முறி(கள்) ஆகியன கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் ஒப்படைக்கப்படும்போது வரவு வைப்பதுடன், உண்டியல்(கள்)/முறி(கள்) ஆகியவற்றின் மீள்விற்பனைத் திகதியில் மேலே கூறப்பட்ட கணக்கில் ரூ............................ பற்று (மீள்விற்பனைப் பெறுமதி) வைக்கப்படும். எமது பெயரில் உரிய முறையில் புறக்குறிப்பீடு செய்யப்பட்ட மேலே கூறப்பட்ட திறைசேரி உண்டியல்(கள்)/ முறி(கள்) கொள்வனவுத் திகதியிலேயே இலங்கை மத்திய வங்கிக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். இவை மீள்விற்பனைத் திகதியில் புறக்கீடு செய்யப்பட்டு ஒப்படைக்கப்படும்.

அங்கீகாரம் பெற்றவரின் கையொப்பம்
(மத்திய வங்கி)

அங்கீகாரம் பெற்றவரின் கையொப்பம்
(மத்திய வங்கி)

நாங்கள் உடன்படுகின்றோம்.

அங்கீகாரம் பெற்றவரின் கையொப்பம்
(முதனிலை வணிகர்/வர்த்தக வங்கி)

அங்கீகாரம் பெற்றவரின் கையொப்பம்
(முதனிலை வணிகர்/வர்த்தக வங்கி)

அடையாள முத்திரை

இன்று 1400 மணிக்கு முன்பு உறுதிப்படுத்தவும்.
* பொருத்தமான இடங்களில்.

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்: பீடி/05/98

வங்கித் தொழில் திணைக்களம்,
வெளிநாட்டு நிதிப் பிரிவு,
இலங்கை மத்திய வங்கி,
1998 நவெம்பர் 11.

முகாமையாளர்,
மக்கள் வங்கி,
இறக்குமதிப் பிரிவு 3,
பன்னாட்டுப் பிரிவு,
ஏஎன்சிஎல் (லேக்கவுஸ்) கட்டடம்,
கொழும்பு - 10.

அன்புள்ள ஐயா,

**பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு 2938 சீஈ – வலுப் பணிகள் வழங்கல் செயற்றிட்டம்**

உலக வங்கியின் பன்னாட்டு அபிவிருத்தியமைப்பு மற்றும் உலகளாவிய சூழல் வசதி ஆகியவற்றினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட தலைப்பிடப்பட்ட கடனின் கீழான இறக்குமதிகள் தொடர்பில் பின்வரும் நடவடிக்கை முறைகள் கவனத்திலெடுக்கப்படல் வேண்டும்.

1. 50, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 2இலுள்ள செயற்றிட்ட இணைப்பாளரின் சார்பில் தங்களது வங்கியினால் நிறுவப்பட்ட உறுதிப்படுத்தப்பட்டதும் கைமீட்புச் செய்ய முடியாததும், துணைநாடாததுமான நாணயக் கடிதங்களுக்கெதிராக இறக்குமதிகள் மேற்கொள்ளப்படலாம்.

2. நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கான உங்களது அதிகாரமானது, "ஐடீஏ 2938 சீஈ – வலுப்பணிகள் வழங்கல் செயற்றிட்டம்" என்ற தலைப்பின் கீழ் வெளிநாட்டு மூலவளங்களின் பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கடிதங்களாகும்.

3. தங்களது வங்கியினால் திறக்கப்பட்ட ஒவ்வொரு நாணயக் கடிதமும் என்னால் வேறுவகையில் மதியுரை வழங்கப்பட்டாலன்றி, கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் செலவீடு மேற்கொள்ளப்பப்படுமென்பதைக் குறிப்பிடுவதோடு, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியின் சார்பில் தனது சிறப்புக் கடப்பாட்டினை வழங்கும்போதே நாணயக் கடிதம் தொழிற்படத் தொடங்கும் என்பதனையும் குறிப்பிடல் வேண்டும்.

4. பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புக்கான சிறப்புக் கடப்பாடுகளுக்கான விண்ணப்பங்கள் தங்களது வாடிக்கையாளரினால் பத்திரம் 1931இல் மேற்கொள்ளப்பட வேண்டும். (பிரிவெடை இணைக்கப்பட்டுள்ளது.)

   (அ) மேற்கொள்ளப்படவேண்டிய கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தத்தின் அல்லது கொள்வனவுக் கட்டளையின் பிரதியொன்று,

   (ஆ) தங்களது வங்கி வழங்க உத்தேசித்துள்ள நாணயக் கடிதத்தின் இரண்டு பிரதிகள்.

5. கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கியானது ஒவ்வொரு நாணயக் கடிதத்திலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் பிரதிகளை பன்னாட்டு அபிவிருத்தி அமைப்புக்கு வழங்கவேண்டுமென ஆலோசனை வழங்கப்படவேண்டும். பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது பின்வரும் திருத்தங்கள் தொடர்பில் தனது எழுத்திலான ஒப்புதலை வழங்கும்.

(அ) நாணயக் கடிதத்தின் பெறுமதி.

(ஆ) பொருட்களின் விபரம் அல்லது அளவு.

(இ) நன்மை பெறுநர்.

(ஈ) நாணயக் கடிதத்தின் காலாவதித் திகதியை அதன் மூலத் திகதிக்கு அப்பால் ஆறு மாதங்களுக்கு மேலாகவோ அல்லது பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பினால் வழங்கபட்ட சிறப்புக் கடப்பாட்டில் குறிப்பிடப்பட்ட திகதிக்கு அப்பாலோ நீடித்தல்.

ஏனைய எந்தத் திருத்தங்களுக்கும் பன்னாட்டு அபிவிருத்திச் சபையின் முன் ஒப்புதல் தேவையில்லை.

6. தலைப்பிலான தொடர் கடனானது சிறப்பு எடுப்பனவு உரிமையில் வகைப்படுத்தப்பட்டமையால், வேறொரு நாணயத்தில் வெளிப்படுத்தப்பட்ட நாணயக் கடிதங்களைப் பொறுத்தவரையில் பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்கான தனது சிறப்புக் கடன்பாட்டுப் பத்திரங்களில் சிஎஉ கடப்பாடுபற்றி தனிப்படக் குறிப்பிடும். தனது கடப்பாட்டினை இவ்வாறு மட்டுப்படுத்துவதன் காரணமாக, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பானது, நாணயக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டவாறு வெளிநாட்டிலுள்ள தங்களது பேராளருக்கு வெளிநாட்டு நாணயத்தின் முழுத்தொகையையும் வழங்காதுவிட்டால், செலாவணிக் கட்டுப்பாட்டாளரினால் இது தொடர்பில் தங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிக்குரிய நிலுவையை தாங்கள் செலுத்தலாம்.

7. இக் கொடுகடனின் கீழான இறக்குமதியாளர்கள்,அரசின் இணைக்கிணை நிதியக் கணக்கோடு தொடர்புடைய கப்பற்படுத்தல் ஆவணங்களின் ரூபாப் பெறுமதியைச் செலுத்துமாறு வேண்டப்பட மாட்டார்கள். அத்தகைய ஆவணங்கள் கிடைக்கப் பெற்றவுடன், தங்களுக்கு அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடும் வங்கிக்கு சேரவேண்டிய தரகுக் கூலிகள், கட்டணங்கள் ஏதேனும் இருந்தால் அவை மீட்டுக்கொள்ளப்பட்ட பின்னர் விடுவிக்கலாம்.

## தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண்: பீடி/03/98

தொடர்பு எண்: பீடி/எப்சீபீஎஸ்/1/98
வங்கித் தொழில் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி
அ. பெ. எண் 590,
கொழும்பு.

தொடர்பு எண்: ஈசீ/03/98(டி)
செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
அ. பெ. எண் 883,
கொழும்பு.
1998 நவெம்பர் 12.

வர்த்தக வங்கிகளுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

### ஐரோப்பாவின் தனி நாணயமான "யூரோ"வின் அறிமுகம்

ஐரோப்பிய ஒன்றியம் தனது உறுப்புரிமை நாடுகளில் "யூரோ" என அழைக்கப்படும் தனியொரு நாணயத்தை 1.1.1999இலிருந்து அறிமுகப்படுத்துவதெனத் தீர்மானித்துள்ளது. இத் திகதியிலிருந்து பங்குபெறும் நாடுகளின் தேசிய நாணயங்களினது மாற்றல் வீதங்களும், புதிய நாணயத்துக்கெதிராக கைமீட்புச் செய்ய முடியாதவாறு பிணிக்கப்பட்டிருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஒசுத்திரியா, பெல்ஜியம், பின்லாந்து, பிரான்சு, சேர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்போர்க், நெதர்லாந்து, போத்துக்கல் மற்றும் இசுப்பெயின் ஆகிய பதினொரு ஐரோப்பிய நாடுகளும் தமது தேசிய நாணயங்களுக்கெதிராக இவ்வுத்தேச தனி நாணயத்தை ஏற்றுக்கொள்ள இணங்கியுள்ளன. 1.1.1999இலிருந்து 31.12.2001வரையயான மாற்றல் நிகழும் பகுதியில், மேலே கூறப்பட்ட உறுப்புரிமை நாடுகளின் தேசிய நாணயங்களுடன் யூரோ இணைந்து தொழிற்படும். இத்தகைய தேசிய நாணயங்கள் 1.1.2002இலிருந்து நடைமுறையில் இல்லாது ஒழிக்கப்படும்.

